# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.103/2015 நாள்.11.07.2025

PW1- திரு.கல்யாணசுந்தரம், த/பெ. திரு.சோமசுந்தரம்

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

என்னுடைய வழக்கில் எவ்வளவு பாகம் கோரியுள்ளேன் என்றால் 1/8. என் வாரிசுகளான மகன் மகளுக்கு தலா 1/8 கிடைக்ககூடியது என்றால் ஆமாம். வழக்கு சொத்து வழக்கு போடுவதற்கு முன்பு தரிசு நிலங்களாக இருந்தது என்றும் அவைகளை மனைபிரிவுகளை மாற்ற 2ஆம் பிரதிவாதி வசம் ஒப்புகொண்டு ஒப்படைத்தேன் என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி என்னுடைய மகன்தான் எல்லா செலவும் செய்து மனைகளாக பிரித்தான் என்றால் ஆமாம். அவ்வாறு அவர் செலவு செய்ததற்கு மனைகளாக விற்கும்போது எங்களுக்கு வரும் தொகைகளில் இருந்து அவருக்கு கொடுக்கவேண்டும் என்று ஒப்புகொண்டோம் என்றால் பஞ்சாயத்தில் செலவுக்காக 3 பிளாட்டை கொடுக்கசொன்னார்கள். அப்படி சொன்னது சின்னவாண்டையார். அவ்வாறு பேசியது விபரத்தை இவ்வழக்கில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். வழக்கில் அவ்வாறு எந்த விபரமும் சொல்லவில்லை என்றும் நான் சொன்னது போல் பஞ்சாயத்து பேசி 3 பிளாட் கொடுப்பதாக பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. இன்றையதேதி வரை அவருக்கு அந்த வகையில் 3பிளாட் கொடுத்துவிட்டோமா என்றால் கொடுத்துவிட்டோம். யார் பெயரில் கொடுத்தோம் என்றால் அவர் சொன்னா நபர்கள் பெயரில் பதிவு செய்து கொடுத்துவிட்டோம். அவ்வாறு நான் சொல்வது தவறு என்றும், அப்படி யாருக்கும் அவரும் கிரயம் கேட்கவில்லை என்றும், நாங்களும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனைபிரிவுகளாக பிரிக்கபட்ட பின்னர் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சேர்ந்துதான் 7 மனைகளை விற்றோம் என்றால் ஆமாம். அவ்வாறு சொத்தை கிரயம் செய்து கொடுக்கும்போது பூர்விக சொத்து என்றும் எல்லோருக்கும் உரிமையுள்ளது என்றும் சொல்லிதான் விற்றோம் என்றால் ஆமாம். 7 மனைகள் விற்கபட்ட பின் என்னுடைய 2ஆம் வாதி மகள் மீனாபெயரில் எத்தனை மனைகளை செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தேன் என்றால் 5 மனைகள். 5 மனைகளை செட்டில்மெண்ட் எழுதிகொடுக்கும்போது எனக்கு மட்டும் சொந்தம் என்றும், பட்டா உள்ளது என்று சொல்லி எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். அவ்வாறு எழுதி கொடுத்து தவறு என்றால் ஆமாம். 7 மனைகள் விற்றதில் அவரவர் பெற்ற கிரய பணத்திலிருந்து 2ஆம் பிரதிவாதிக்கு மனை பிரிவு செய்த செலவு தொகைக்கு கொடுக்கவில்லை என்றால் 7 மனைகளையும் அவரேதான் விற்று பணம் வாங்கிகொண்டார் இன்று வரை அவர்தான் வைத்து கொண்டு இருக்கிறார். அனைத்து மனைகளும் அவரிடம்தான் உள்ளது. 7மனைகள் விற்கபட்டதில் 2லட்சம் கொடுத்ததாக சொல்லியிருந்தால் தவறா என்றால் இல்லை 2லட்சம் கொடுத்துள்ளார். 7மனைகளுக்கும் விற்கபட்டதில் 2ஆம் பிரதிவாதிக்கு மேற்படி செலவை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனைகள் விற்கபட்டது சம்மந்தமாக பஞ்சாயத்து எங்கு வைத்து நடந்தது என்றால் 2014ஆம் ஆண்டு பூண்டி வாண்டையார் இல்லத்தில் நடந்தது. பஞ்சாயத்தில் நடந்த விபரங்களை எழுத்து மூலமாக எழுதி கையெழுத்து போட்டுள்ளோமா என்றால் ஆமாம். 08.09.2014 பஞ்சாயத்து பேசபட்டது சம்மந்தமாக பிராதில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. அவ்வாறு பிராதில் சொல்லாதது காரணம் சொன்னால் வழக்கு பாதமாகிவிடும் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணநகல்தான் அந்த பஞ்சாயத்து உறுதிமொழி என்றால் ஆமாம். அதன் அசல் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவண நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். பஞ்சாயத்தில் என்ன பேசி முடித்தோம்

என்றால் மணிமொழி பேசி முடிக்க ஒத்துகொள்ளவில்லை. அவ்வாறு பஞ்சாயத்தில் மணிமொழிக்கு 53 லட்சம் பணமாக கொடுப்பதாக பேசிமுடிக்கபட்டது என்றால் 60 லட்சம் கேட்டார் ஆனால் திரும்பி வரவில்லை. நான் பஞ்சாயத்தில் ஒத்துகொண்ட தொகையை கொடுக்கவில்லை என்றால் நான் ஒத்துகொள்ளவில்லை. மகள்களுக்கு மனைகளை எழுதி வைப்பது தொடர்பாக ஆவணம் தயார் செய்யபட்டதா என்றால் ஆமாம். மனை கொடுப்பது ஏற்பட்ட பஞ்சாயத்து எழுதபட்டதா என்றால் இல்லை. அவை எதுவும் பதிவாகவில்லை என்றால் ஆமாம். மகள்களுக்கு 5 , 5 மனைகள் கொடுப்பதாக பஞ்சாயத்து பேசவில்லை என்றும் அதற்கு 2ஆம் பிரதிவாதி ஒப்புகொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான்தான் 2ஆம் பிரதிவாதிக்கு பேசிய தொகை கொடுக்கவில்லை என்றும், நான்தான் எனக்கு மட்டுமே உரிமை இல்லாத நிலையில் 5 மனைகளை 2வது வாதிக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதி ஆட்களுடன் 2015 ஆம் ஆண்டு வீட்டில் வந்து அடிக்க வந்தார் என்று சொல்லியுள்ளேனே அது குறித் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் 15 பேர் வந்தார்கள் அவர் அடித்து என் வலது பக்க முதுகெழும்பு உடைந்துவிட்டது புகார் கொடுத்தேன். அது வழக்காகியுள்ளோம். அது தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நடக்கவில்லை என்றும் வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 3ஆம் பிரதிவாதி நித்யாவிற்கு 2ஆம் பிரதிவாதி மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்தார் என்றால் ஆமாம். நான் அந்த திருமணத்தில் கலந்துகொள்ளவில்லை என்றால் என்னிடம் சொல்லவில்லை. அவருடைய திருமண செலவுகள் 12லட்சம் கொடுப்பதாக ஒப்புகொண்டேன் என்றால் இல்லை. ஒப்பு கொண்டுவிட்டு தற்போது நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2ஆம் வாதிக்கு எழுதி கொடுத்த சொத்து எழுதி வைத்ததற்கு பிறகு மற்றொரு வழக்கு அ.வ.எண் 28/18 தாக்கல் செய்யபட்டு தொடர் விசாரணையில் உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய மகன் அசோக்குமார் 5ஆம் வாதியாக இருந்து மனுதாக்கல் செய்யபட்டு பிரதிவாதியாக மாற்றபட்டார் என்றால் ஆமாம். நான் 2ஆம் பிரதிவாதியிடம் மனைபிரிவுகளாக பிரிக்க எல்லா செலவுகளையும் செய்ய வைத்துவிட்டு அவர் செய்த செலவு தொகையை திருப்பி கொடுக்காமல் ஏமாற்றவேண்டும் என்பதற்காக தாவா சொத்துக்கள் தொடர்பாக எனது மகள்கள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க நானே நடவடிக்கை எடுத்து அதை 2ஆம்பிரதிவாதி தடுத்ததால் வேண்டும் என்றே இந்த பாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கேட்பதுபோல் தாவா சொத்தில் எனக்கு ஒருபாகம் கிடைக்கஉரிமை இல்லை என்றால் சரியல்ல. தவறான விபரங்களுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

4ஆம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்குவிசாரணை ஏற்கொள்ளபட்டது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.